தி/கிண்/ அப்துல் மஜீது வித்தியாலயம்

**முதலாம் தவணைப் பரீட்சை - 2020**

தரம் **09**

பாடம் : இஸ்லாம்

சுட்டெண் :

பகுதி - I,II

நேரம் : 02 மணி

## பகுதி - I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. ரிஸாலத் என்பதன் பொருள்
(1) இறைமறுப்பு (2) ஏகத்துவம் (3) தூதுத்துவம் (4) மறுமை

02. மீண்டும் எழுப்பப்படுதல் என்ற பொருளைக் குறிக்கும் சொல்
(1) ப.்.ஸ் (2) மஹ்ஷர் (3) ஸிராத் (4) ஹிஸாப்

03. "நீங்கள் பூமியில் பிரயாணம் செய்யும் போது தொழுகையை சுருக்கிக் கொள்வது உங்கள் மீது குற்றமாகாது" என்பது
(1) அல் ஹதீஸ் (2) அறிஞர்கள் கூற்று (3) அல்குர்ஆன் வசனம் (4) இமாம்களின் கூற்று

04. ஜனாஸா தொழுகைக்கான தக்பீர்களின் எண்ணிக்கை
(1) 06 (2) 05 (3) 07 (4) 04

05. "தவ்ஹீத் உலூஹிய்யத்" என்பதன் கருத்தைத் தராத சொல்
(1) வணங்கத் தருகுதியானவன் (2) பிரார்த்தனை புரிவதற்குத் தகுதியானவன்
(3) அன்புக்குரியவன் (4) படைப்பாளன்

06. ஜனாஸாத் தொழுகையில் இரண்டாம் தக்பீருக்குப் பின் நிறைவேற்ற வேண்டியவை
(1) ஸுரா பாத்திஹா ஓதுதல்
(2) ஜனாஸாவிற்காக துஆ கேட்டல்
(3) நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து சொல்லுதல்
(4) ஸலாம் கூறுதல்

07. 100 ஆடுகளை வைத்திருக்கும் ஒருவர் ஸகாத்தாக வழங்க வேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை
(1) ஒன்று (2) இரண்டு (3) மூன்று (4) நான்கு

08. பேராதனைப் பூங்காவிற்கு சுற்றுலா சென்ற தி/கிண்/ அப்துல் மஜீது வித்தியாலய மாணவர்கள் அஸருடைய நேரத்தில் முதலில் ளுஹர் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து அஸரையும் தொழுதனர் இது
(1) ஜம்உ த.்.கீர் (2) ஜம்உத் தக்தீம் (3) ஜம்உ (4) கஸ்ர்

09. மஆத் என்றால் என்ன?
(1) மரணத்தின் பின்னர் உள்ள வாழ்க்கை
(2) நபி ரஸுல்மாரக்ளை நம்பிக்கை கொள்வது
(3) மலக்குகள், ஜின்களை நம்பிக்கை கொள்வது
(4) கழா, கத்ர் பற்றிய நம்பிக்கை

10. அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் எண்ணிக்கை
    (1) 114 (2) 19 (3) 20 (4) 99

11. ''காத்தமுன் நபிய்யீன்'' என்பதன் பொருள்
    (1) நபமார்களில் இறுதியானவர் (2) நபிமார்களின் பண்புகள்
    (3) நபித்துவப் பணி (4) வேதக் கட்டளைகள்

12. யவ்முல் ஹிஸாப் என்பது
    (1) நரகின் மேல் போடப்பட்ட பாலம்
    (2) நீர்த் தடாகம்
    (3) விசாரணை புரியும் நாள்
    (4) திறந்த வெளி

13. மிக உயர்ந்த சுவனம்
    (1) ஜன்னத்துல் ம.்.வா (2) ஜன்னத்துல் நஈம்
    (3) ஜன்னதுல் அத்ன் (4) ஜன்னத்துல் பிர்தவ்ஸ்

14. பின்வருவனற்றுள் நரகின் பெயர் அல்லாது
    (1) முகாமா (2) ஸஈர் (3) ஹாவியா (4) ஹுதமா

15. ''அல் ஹதஸுல் அக்பர் என்பது
    (1) பெருந்தொடக்கு (2) சிறு தொடக்கு (3) சுத்தமான நிலை (4) அசுத்தமான நிலை

16. உலுல் அஸ்ம் எனப்படுவோர்
    (1) திடவுறுதி பூண்டோர் (2) வேதங்கள் வழங்கப்பட்டவர்கள்
    (3) ஸுஹுபுகள் வழங்கப்பெற்றோர் (3) நபித்தோழர்கள்

17. தௌஹீத் என்பதன் எதிர்ச் சொல்
    (1) குப்ர் (2) ரித்தத் (3) ஷிர்க் (4) நிபாக்

18. இப்றாஹீம் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர்
    (1) கலீமுல்லாஹ் (2) கலீலுல்லாஹ் (3) ரூஹுல்லாஹ் (4) அபுல் பஷர்

19. அல்லாஹ்வின் திருநாமங்களில் ''அர் ரஹ்மான்'' என்பதன் பொருள்
    (1) நிகரற்ற அன்புடையோன் (2) அளவற்ற அருளாளன்
    (3) மிகவும் இரக்கமுடையவன் (4) மிகவும் மன்னிப்பவன்

20. தொழுகையின் பர்ளுகள்
    (1) 19 (2) 06 (3) 17 (4) 05

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி – II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) சுருக்கமான விடை தருக.

i. தவ்ஹீத் என்றால் என்ன?
ii. அஸ்மாஉல் ஹுஸ்னா என்றால் என்ன?
iii. “கழா” என்பதன் பொருள் என்ன?
iv. ஜனாபத் என்றால் என்ன?
v. சேர்த்தோ சுருக்கியோ தொழ முடியாத தொழுகை எது?
vi. “கபன்” என்றால் என்ன?
vii. “ஸகாத்” என்பதன் பொருள் என்ன?
viii. அல்லாஹ் ஒன்றைப் படைக்க நாடும்போது கூறும் வார்த்தை என்ன?
ix. மறுமை நாளின் பெயர்களில் இரண்டைக் குறிப்பிடுக.
x. “ஹிவ்துல் கவ்ஸர்” என்பதன் பொருள் என்ன?

(10x2=20 புள்ளிகள்)

02)

i. ஜனாபத் உடையோர் செய்யக் கூடாத விடயங்களில் இரண்டைக் குறிப்பிடுக.
ii. ஜனாத்தை ஏற்படுத்தும் காரணங்களில் மூன்றைக் குறிப்பிடுக.
iii. கடமையான குளிப்பின் ஸுன்னத்துக்களில் ஐந்தைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

03)

i. ஸகாத் விதியாவதற்கான நிபந்தனைகளில் இரண்டைக் குறிப்பிடுக.
ii. ஸகாத் விதியாகும் பொருட் தொகுதிகள் மூன்றைத் தருக.
iii. ஸகாதின் நன்மைகள் ஐந்தைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

04)

i. அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பான இரண்டு திருநாமங்களைத் தருக.
ii. கழா கத்ரை நம்புவதன் நன்மைகளில் மூன்றைத் தருக.
iii. சுவனம் செல்வதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் ஐந்தை எழுதுக.

(2+3+5=10 புள்ளிகள்)

05)

i. வெள்ளிக்கிழமையின் சிறப்புக்களில் இரண்டைத் தருக
ii. ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளைத் தருக.
iii. ஜும்ஆ தினத்தன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளில் ஐந்து விடயங்களைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)